**CC 131/2024**

**அ.சா. 2          பெயர் : மல்லையன்**

**08.04.2026**

**1 முதல் 7 எதிரிகள் ஆஜர்.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**

1. தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரிகளில் ஒருவர் தான் நான் முன்பு முதல் விசாரணையின்போது கூறிய நான்கு நபர்களில் ஒருவர் ஆவார். ( தற்போது சாட்சி 2வது எதிரியான கதிரேசனை அடையாளம் காட்டுகிறார்) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அசா.1 அசோக்குமார் எனக்கு என்ன உறவு என்றால் எனது அத்தை மகன் ஆவார். ப.சா.3 கருப்பசாமி எனக்கு மாமா மகன் என்றால் சரிதான். இதர பட்டியல் சாட்சிகளான முத்துப்பாண்டி, செல்வராஜ், சிவசாமி, மாரிசெல்வம், சேகர் (எ) கந்தசாமி, ராமு, அம்பிகா ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். தற்போது முத்துப்பாண்டி உயிருடன் இல்லை. அடிக்கும்போது நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடன் சேர்ந்து இருந்த ராமராஜ் சம்பவத்தை நேரில் பார்த்தாரா என்றால் இல்லை, அவர் ஆட்களை கூப்பிடுவதற்காக ஊருக்குள் சென்றுவிட்டார்.

2. நான் முதல் விசாரணையில் கூறிய 4 நபர்கள் மட்டும் தான் சம்பவத்தில் ஈடுபட்டார்களா என்றால் இல்லை, மற்ற நபர்கள் அடித்துவிட்டு நான் போவதற்குள் சென்றுவிட்டார்கள். தகவல் தெரிந்து சுமார் 15 நிமிடத்தில் ஊர்க்காரர்கள் அங்கு வந்துவிட்டார்கள். அவர்கள் தான் காயம்பட்ட நபரான அசோக்குமாரை 108 ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அசா.1 எனது உறவுக்காரர் என்ற காரணத்தினால் நான் அவருக்கு ஆதரவாக நடக்காத சம்பவத்தை நடந்ததாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, சம்பவம் நடந்தது. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**